வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 25-08-2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

இந்தியாவின் டிஜிட்டல் பணப் பட்டுவாடா பயணத்தில், முக்கிய திருப்புமுனையாக திகழும் யுபிஐ தொழில்நுட்பத்தின் பத்து ஆண்டு கால வெற்றியை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

அரசு சார்ந்த ஏவுகணை தொழில்நுட்பங்களை, பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் உள்நாட்டு உற்பத்திக்கு வழங்க, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

புதுச்சேரியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், இந்த ஆண்டிலேயே செயல்படுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரி வணிக சீர்திருத்த சட்ட முன் வரைவு, மாநில சட்டமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

யுபிஐ -1 (12)

2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதி தொடக்கப்பட்ட இந்தியாவின் யுபிஐ-டிஜிட்டல் பணப் பரிமாற்ற வசதி, இன்றுடன் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்து, 11-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இந்தியாவின் டிஜிட்டல் பணப் பட்டுவாடா பயணத்தில், முக்கிய திருப்புமுனையாக திகழும் யுபிஐ தொழில்நுட்பத்தின் பத்து ஆண்டு கால வெற்றியை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார். இது, ஒவ்வொரு இந்தியரும், பெருமைப்பட வேண்டிய வெற்றி என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். யுபிஐ வசதியின் பயன்பாடு தொடர்பான அனுபவங்களை, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உள்ளிட்டவர்களும், யுபிஐ தொழில்நுட்பத்தின் வெற்றியை பாராட்டியுள்ளனர். யுபிஐ தொழில்நுட்பம் குறித்து ஒரு செய்தி தொகுப்பு...

யுபிஐ -2 வாய்ஸ் (13)

யுபிஐ வசதி மூலம், கடந்த நிதியாண்டில் மட்டும், மொத்தம் 314 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், 24 ஆயிரத்து 162 கோடி பணப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கடந்த 2016-17ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது, சுமார் 13 ஆயிரம் மடங்கு வளர்ச்சியாகும். இந்தியாவில், மக்களின் பணப் பரிமாற்ற பழக்கத்தில், புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள இந்த வசதி, தற்போது, எல்லைகளின் குறுக்கே செயல்படும் டிஜிட்டல் பணப் பரிமாற்ற வசதியாக, இலங்கை, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர், மொரீஷியஸ், பிரான்ஸ் உட்பட, 11 நாடுகளிலும், அமலாகி வருகிறது. தற்போது உலகின் 49 சதவிகித நிகழ்நேர பணப் பரிமாற்றங்கள் யுபிஐ மூலமாக மேற்கொள்ளப் படுவதும், இந்தியாவின் யுபிஐ வசதியை, உலகின் மிகப் பெரிய, நிகழ் நேர பணப் பரிமாற்ற வசதியாக, சர்வதேச செலாவணி நிதியம் அங்கீகரித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நிர்மலா (09)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று முதல், கனடா மற்றும் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்கிறார். இருதரப்பு பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மை உறவுகளையும், முதலீட்டு தொடர்புகளையும், வலுப்படுத்திக் கொள்ள, இப்பயணத்தின் போது முக்கியத்துவம் அளிக்கப்படும் என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கனடாவின் டொரன்டோ நகரில், அந்நாட்டு நிதியமைச்சருடன் இணைந்து, நிதி மற்றும் பொருளாதார பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கிறார்.

ராஜ்நாத் ஏவுகணை (13)

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகத்தினால் உருவாக்கப்பட்ட, மரபு சார்ந்த அனைத்து ஏவுகணை தொழில்நுட்பங்களையும், பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கும் உத்தேசத்திற்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார். இந்திய தொழில் நுட்பங்கள் மூலம், பாதுகாப்புத் துறைக்குத் தேவையான, ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களை, உரிய தரத்துடன் இந்தியாவிலேயே தயாரிப்பதில், உள்நாட்டு அளவிலான பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதாக, இம்முடிவு அமைந்துள்ளது. நவீன பாதுகாப்பு உற்பத்தியில், உள்நாட்டு நிறுவனங்களின் திறன்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும், பாதுகாப்பு உற்பத்தியில் உள்நாட்டுத் திறன்களை வலுப்படுத்தவும், இதனால் ஏதுவாகும் என பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு உற்பத்தி (10)

கடந்த நிதியாண்டில், இந்திய பாதுகாப்பு உற்பத்தி துறையின் மதிப்பு, 1.78 லட்சம் கோடி ரூபாயாக, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாக, பாதுகாப்பு உற்பத்தி துறை செயலர், திரு. சஞ்சீவ் குமார் தெரிவித்துள்ளார். இது, கடந்த 2013-

14ஆம் ஆண்டில், வெறும் 43 ஆயிரம் கோடி ரூபாயாக மட்டுமே இருந்ததாக, அவர் இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு உற்பத்தி தொடர்பான தேசிய மாநாட்டில் பேசுகையில் கூறினார். இந்தியாவில், உள்நாட்டு அளவிலான பாதுகாப்பு உற்பத்திச் சூழல் வேகமாக மேம்பட்டு வருவதால், தொழில் முனைவோர் இத்துறைக்கான, பிரத்யேக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளில், அதிக முதலீடு செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

### வான்வழி சரக்கு (14)

இந்தியாவின் வான்வழி சரக்கு போக்குவரத்து துறை, கடந்த சில ஆண்டுகளில், தொடர்ச்சியான முறையில் வளர்ச்சியடைந்து வருவதாகவும், தற்போது இத்துறையின் வளர்ச்சி 40 சதவிகிதமாக அதிகரித்து இருப்பதாகவும், மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார். நாட்டில் உலகத்தரம் வாய்ந்த வான்வழி சரக்கு போக்குவரத்து மையங்கள், மற்றும், இதர வசதிகளை உருவாக்குவதே அரசின் நோக்கம் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். நாட்டில் சரக்கு போக்குவரத்து கட்டமைப்பை, விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். டெல்லி விமான நிலையத்தில், வான்வழி சரக்கு போக்குவரத்து மையம் ஒன்றை அமைக்க, FedEx நிறுவனத்திற்கும், GMR Airports நிறுவனத்திற்கும் இடையே, கூட்டாண்மை எட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### ஜோதிராதித்ய சிந்தியா C-DOT (13)

6-ஜி தொலை தொடர்பு தொழில் நுட்பத்திலும், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட நவீன துறைகளிலும், அடுத்த கட்ட வளர்ச்சியை வடிவமைக்கும் நாடாகத் திகழ்வதே, இந்தியாவின் விருப்பம் என்று மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், C-DOT என்னும் டெலிமாட்டிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் 43ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், இந்தியாவின் தகவல் தொடர்பு புரட்சியில், C-DOT அமைப்பின் பங்கு மிக முக்கியமானது என்றும், நவீன தொழில்நுட்பங்களில், புதுமைகளைத் தூண்டும் அமைப்பாகவே, இந்த மையம் செயல்பட்டு வருவதாகவும் கூறினார். இந்தியாவின் தொழில்நுட்ப பயணத்திலும், நாட்டு மக்களின் வாழ்விலும், ஒருங்கிணைந்த ஒரு அங்கமாகவே, C-DOT மையம் திகழ்வதாக, அவர் குறிப்பிட்டார்.

### ரங்கசாமி (15)

புதுச்சேரியில் நகரப்பகுதி மக்களுக்கு, நல்ல குடிநீர் கிடைக்க ஏதுவாக, கடல் நீரை, குடிநீராக்கும் திட்டம், இந்த ஆண்டிலேயே செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று சட்டமன்றத்தில், துணைநிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களின் போது,

உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், மழை நீரை சேகரித்து, நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தவும், அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தி, நீர்த் தேக்கத் திறனை அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். புதுச்சேரியில் பொருளாதார வளர்ச்சி காரணமாக, வாகனங்களை வாங்குவதற்கான பொதுமக்களின் சக்தி அதிகரித்து இருப்பதால், போக்குவரத்து நெரிசல் இருக்கத்தான் செய்யும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். போக்குவரத்து நெரிசலை சரிப்படுத்த, அரசு, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக, அவர் மேலும் கூறினார். இன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களில், புதிய உறுப்பினர்களும் பங்கேற்றுப் பேசினர்.

## புதுச்சேரி மசோதா – 1 (04)

புதுச்சேரி வணிக சீர்திருத்த சட்ட முன் வரைவு, மாநில சட்டமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், இம்மசோதாவை அவையில் தாக்கல் செய்தார். மசோதா குறித்து கூடுதல் விவரங்கள்…

## புதுச்சேரி மசோதா – 2 வாய்ஸ் (18)

முதலீடு, தொழில் முனைவு, புதுமையாக்கம் மற்றும் வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்கான முக்கிய கேந்திரமாக, புதுச்சேரியை மாற்றும் நோக்கத்துடன் கூடிய, புதுச்சேரி வணிக சீர்திருத்த மசோதாவில், புதுச்சேரியில் வர்த்தகம் புரிவதற்கான விதிமுறைகள், நம்பிக்கை, பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மை அடிப்படையில், எளிமையாக்கப் பட்டுள்ளன. அரசுக்கும், தொழில் முனைவோருக்கும் இடையிலான உறவுகளை, வலுப்படுத்தும் வகையில், காலக்கெடு அடிப்படையிலான முடிவுகளை மேற்கொள்ள மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, சிறு-குறு, மற்றும், நடுத்தர தொழில் நிறுவனங்களின், கடனை வசூலிப்பதில் அனுமதிக்கப்படும் சலுகைக் காலத்தை 5 ஆண்டுகளாக நீட்டிக்கவும், நில பயன்பாட்டு விதிமுறைகளில் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்தவும், விதிமுறைகள் இடம் பெற்றுள்ளன. தொழிலாளர் பாதுகாப்பு, பொது பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு, பொது சுகாதாரம் உட்பட, அரசின் பல்வேறு அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால், தொழில் முனைவோர் தரப்பிலிருந்து முயற்சி எடுக்க தேவையின்றி, தானாகவே மேல் முறையீடு தொடங்கும் வகையில், புதிய நடைமுறைகள் மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

## மதுபானம் (04)

மிலாது நபி திருநாளை முன்னிட்டு, மாஹேயில் இன்றும், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியில் நாளையும், அனைத்து மதுபானக் கடைகளை மூட கலால் துறை உத்தரவிட்டுள்ளது. இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்க எடுக்கப்படும என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## வானிலை (15)

இன்று கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சீபுரம் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 31ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம், சின்னக் கல்லாரில் 10 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## பதிப்பக பிரிவு (10)

மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின், பதிப்பக பிரிவு புத்தக தயாரிப்பில் சிறந்த செயல்பாடுகளுக்கான, இந்திய பதிப்பாளர் கூட்டமைப்பின், 7 விருதுகளை வென்றுள்ளது. இந்தி, உருது மற்றும் ஆங்கிலத்தில், பதிப்பக பிரிவால் வெளியிடப்படும் பத்திரிக்கைகளும், பதிப்பக பிரிவின் பல்வேறு நூல்களும், இந்த விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் வளர்ச்சி மற்றும் சமகால பிரச்சனைகள் குறித்தும், கலை, கலாச்சாரம், மற்றும், இலக்கியம் குறித்தும், பல்வேறு தகவல்களை வாசகர்களுக்கு வழங்குவதில் இந்நூல்கள் மற்றும் பத்திரிக்கைகள் முக்கிய பங்காற்றி வருவதாக, பதிப்பக பிரிவில் தலைமை இயக்குநர் டாக்டர் தீரஜ் ககாடியா கூறியுள்ளார்.

## பிஜேபி (09)

10 ஆண்டுகளுக்கு முன், யுபிஐ பணப் பரிமாற்ற வசதி தொடக்கப்பட்டபோது, காங்கிரஸ் வெளியிட்ட கேலி-கிண்டல்களை மீறி, யுபிஐ தற்போது, நாட்டின் முக்கிய வலுவாகவே மேம்பட்டுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது. கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. சந்தீப் பாத்ரா, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறினார். உற்பத்தி, பாதுகாப்பு, வேளாண்மை, தொழில்நுட்பம் உட்பட, சுதந்திர தின உரையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்ட, சக்தியின் 7 தாரைகள், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான செயல் திட்டம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## புதுச்சேரி மசோதா வரவேற்பு (12)

புதுச்சேரி வணிக சீர்திருத்த மசோதாவை, இந்திய தொழில்கள் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. தொழில் முனைவோருக்கு ஏற்ற முற்போக்கு சீர்திருத்தங்களில்,

புதுச்சேரி முன்னேறி வருவதை தாங்கள் பாராட்டுவதாக, இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் புதுச்சேரி பிரிவு தலைவர் திரு. எம். நடராஜன் கூறினார். நம்பிக்கை அடிப்படையிலான ஆளுகைக்கு, அரசு மாறிவருவதையே இம்மசோதா குறிப்பதாகவும், இதனால், புதுச்சேரி குறித்த முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்து, முக்கிய முதலீட்டு கேந்திரமாக மேம்படுவதற்கான புதுச்சேரியின் திறன், வலுப்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மசோதாவில் இடம்பெற்றுள்ள சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான அரசின் முயற்சிகளுக்கு, இந்திய தொழில்கள் கூட்டமைப்பு, ஆக்கப்பூர்வ ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

இந்தியாவின் டிஜிட்டல் பணப் பட்டுவாடா பயணத்தில், முக்கிய திருப்புமுனையாக திகழும் யுபிஐ தொழில்நுட்பத்தின் பத்து ஆண்டு கால வெற்றியை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

அரசு சார்ந்த ஏவுகணை தொழில்நுட்பங்களை, பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் உள்நாட்டு உற்பத்திக்கு வழங்க, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

புதுச்சேரியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், இந்த ஆண்டிலேயே செயல்படுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரி வணிக சீர்திருத்த சட்ட முன் வரைவு, மாநில சட்டமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.